ஜனவரி - 12

**"சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவர்களைச் சீர்பொருந்தப் பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக் குறித்து எச்சரிக்கையாயிரு." - கலா 6:1**

மற்றவர்களை நேராகக் குற்றம் சாட்டித் தவறை விபரித்துக் கடிந்து கொள்ளுவதைப் பார்க்கிலும், மிகவும் யோசனையுடனும், பட்சமுடனும் கடிந்து கொள்ளவேண்டும் என்கிற படிப்பினையை நாம் நன்றாகப் படிப்போமாக. அவர்கள் தவறு செய்திருந்தார்கள் என்று நாம் அறிந்திருக்கிற முந்திய இருதய நிலைமையை விசாரித்துக் கடிந்துகொள்ளுவதைப் பார்க்கிலும் இப்பொழுதுள்ள அவர்களுடைய இருதயத்தின் நிலைமையை விசாரித்துக் கடிந்துகொள்ள வேண்டும். தவறு செய்கிற ஒருவரை அவருடைய தப்பிதமான மார்க்கத்திலிருந்து திருப்புவதில் நாம் செலுத்துகிற கவனத்தைவிட, அவரைத் தண்டிப்பதில் சற்றுக் குறைந்த கவனத்தையே செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். தவறான செயல்களுக்காக ஒருவரை ஒருவர் நியாயந்தீர்த்துத் தண்டிக்க எத்தனிக்கக் கூடாது. இன்னும் சரியாக இவைகள் எல்லாம் கர்த்தருடைய கரங்களில் இருக்கிறதென்பதை ஞாபகத்தில் வைப்போமாக. வார்த்தையின் எந்த அர்த்தத்திலாவது நாமே வஞ்சம் தீர்த்துக் கொள்ளவோ அல்லது தண்டனை கொடுக்கவோ அல்லது தீமைக்குத் தீமை செய்யவோ கூடாது.

**- Z ’01, 150 (R 2086).**

தவறு செய்வது விழுந்துபோன மனுஷனின் தன்மை. ஆகையால், எல்லோரும் தவறு செய்கிறார்கள். உதவக்கூடிய வகையில் கடிந்துகொள்ளுவது தெய்வீகத்தன்மை வாய்ந்தது. ஆகையால், இந்த குணசீலத்தை வெகு சிலரே அப்பியாசிக்க முடியும். சரியான அறிவையும், அன்பையும், தன்னடக்கத்தையும் கொண்ட முன்னேறிய கிறிஸ்தவன் மாத்திரமே இதை சரியாய் அப்பியாசிக்கத் திறமையுடையவனாயிருக்கிறான். மற்றவர்களைக் கடிந்துகொள்ளுகிற தான், தானே குற்றமுள்ளவனாகாதவாறு மற்றவர்களுக்கு உதவ வேண்டுமென்றுள்ள தன்னுடைய முயற்சியில் அவன் மிகவும் கவனத்தோடு விழிப்புள்ளவனாயிருக்க வேண்டும்.

**-P ’32, 197.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**ஏசா 57:15; ரோம 15:1,7; 1கொரி 8:9,11; 9:22; எபி 12:13; யாக் 5:19,20; நீதி 24:16; 28:5; ரோம 8:9,14,15; 1கொரி 4:21; 2தெச 3:15; 2தீமோ 2:25; 1கொரி 10:12.**

**கோபுர வாசிப்பு : Z ’02, 197 (R 3033).**

**வினாக்கள் : இந்த வசனத்தின் சம்பந்தமாக இந்தவார அனுபவம் என்ன? அவை எவ்வாறு ஏற்றுக் கொள்ளப்பட்டன? பலாபலன் என்ன?**